


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2023) சென்னை, கலைவாணர் அரங்கத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்ற "நிறுவனங்களின் நாயகர் கலைஞர் நிகழ்ச்சியில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு புகைப்படக் கண்காட்சியினை பார்வையிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (25.11.2023) சென்னை. கலைவாணர் அரங்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி "நிறுவனங்களின் நாயகர் கலைஞர் நிகழ்ச்சியில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்றார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வல்லம் ஒன்றியம் –இல்லோடு ஊராட்சியில்

# கலைஞரின் நூற்றாண்டு வளைவு மண்டபம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் அடிக்கல் நாட்டினார்!

செஞ்சி, நவ. 27-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் வல்லம் மத்திய ஒன்றியம் இல்லோடு ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாளை முன்னிட்டு கலைஞர் நூற்றாண்டு நுழைவு வளைவு மண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டு விழா மற்றும் இளைஞர் அணிச் செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா முன்னிட்டு பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

வல்லம் மத்திய ஒன்றிய பொருளாளர் இல்லோடு பழனி மற்றும் ஊர் பொது மக்கள் பங்களிப்புடன் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு மாணவ, மாணவிகளை முன்னிலைப் படுத்தி கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழா நுழைவு வளைவு மண்டபம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி பணியினை தொடங்கி வைத்தார்.

இதைத்தொடர்ந்து இல்லோடு ஊராட்சி மன்ற தலைவர் இந்திரா பழனி ஏற்பாட்டில் இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கும் பொது மக்களுக்கும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது .

நிகழ்ச்சியில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

இதில் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, தென் சென்னை தெற்கு மாவட்ட அவைத்தலைவர் சைதை குணசேக ரன், மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம்,ஒன்றிய கவுன்சிலர்கள் பத்மநாபன்,பக்தவச்சலம், ஒன்றிய அவைத் தலைவர் வெங்கடேசன், பொருளாளர் பழனி, மாவட்டப் பிரதி ராமதாஸ், துணைச் செயலாளர் பாண்டியராஜன், தொழிலாளர் அமைப்பு சாரா அணி அமைப்பாளர் தமிழரசன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் மலையரசன், முன்னாள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ரிஸ்வான், நிர்வாகிகள் பிரபு, ரமேஷ், அழகேசன், பூங்காவனம், ஜெயந்தி விநாயகர் மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# இளைஞர் அணி வாகனப் பேரணிக்கு வரவேற்பு!

## குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் கழகத்தினர் பங்கேற்பு!

பெரம்பலூர், நவ. 27-

பெரம்பலூர், குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்கு வருகை தந்த இரு சக்கர வாகனப் பேரணிக்கு மாவட்ட எல்லையான மருதையான் கோவில் எனுமிடத்தில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தலைமையில் வரவேற்பு அளிக்கப்பட்டது! பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் இருந்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் இரண்டு சக்கர வாகனம் ஒட்டி வந்து அசத்தினார்.

கலைஞர் மண்டலத்திற்கு வருகை தந்த பேரணிக்கு, குன்னம் சட்டமன்ற தொகுதி, மருதையான் கோவில் எனுமிடத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த பேரணியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், குன்னம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு அரியலூர் மாவட்டத்தில் இருந்து இரு சக்கர வாகனம் ஓட்டி வந்தனர். பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் ஆகியோர் இந்த பேரணியை வரவேற்றனர். குன்னம் வழியாக பெரம்பலூர் தொகுதிக்கு வந்த பேரணி தேசிய நெடுஞ்சாலையில் வாலிகண்டபுரம், திருமாந்துறை சுங்கச்சாவடி வழியாக கடலூர் மாவட்டத்திற்கு சென்றது.

இதில் மாநில நிர்வாகிகள் பா. துரைசாமி, வி.எஸ்.பெரியசாமி, தலை மைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத்,

ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, எம்.ராஜ்குமார், வீ.ஜெகதீசன்,

எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், வேப்பூர் ஒன்றிய பெருந் தலைவர் பிரபா செல்லப் பிள்ளை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஹரிபாஸ்கர் உள்ளிட்ட ஏராளமானோர் உள்ளனர்.

